# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

Under section 173 BNSS ~~(Under Section 154 Cr.P.C.)~~

பா.நா.சு. பிரிவு 173 ன் கீழ் ~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C 8101982

1. District மாவட்டம் : மதுரை PS: காவல்நிலையம் ஊ.த.த.பிரிவு Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 11/2024 Date: நாள் 28-9-24

2. (i) Act சட்டம்: Pc Act 1988 as amended — Sections பிரிவுகள்: 7 of Pc Act 1988 as amended

   (ii) Act சட்டம்: by Prevention of corruption — Sections பிரிவுகள்: by Prevention of corruption

   (iii) Act சட்டம்: (Amended) Act 2018 BNSS — Sections பிரிவுகள்: (Amended) Act 2018 and 106 BNSS

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை 27-9-2024

   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 18.50 hrs — Time to : நேரம் வரை 23.50 hrs.

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28-9-2024 — Time நேரம் : 15.00 hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28-9-2024 — Time நேரம் : 15.45 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகம் மதுரை மாவட்டம் சுமார் 45 km தெற்கு

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — திரு. இப்ராஹிம் சேட் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — காதர் மீரான்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 53/24 — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் — (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம் பழைய [illegible] ஆட்சியர் அலுவலகம் மதுரை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருமதி.P. புஷ்பலதா 47/24 க/பெ முருகேசன், உதவியாளர் பேரையூர் சார்பதிவகம் அயல்பணி (பொறுப்பு) சார்பதிவாளர் கள்ளிக்குடி சார்பதிவகம், மதுரை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

* GCP 240-34(Type-2) 90,000 Cps -21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 28/9/2024 | [signature] 28-9-24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 28-9-24
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 19.20hrs.

Name: பெயர் N. Bharathi Priya
Rank: நிலை Inspector of Police No. எண்
V4AC, Madurai

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**Honoured Sir,**

**Submitted,**

இன்று 28.09.2024-ம் தேதி மதியம் 15.00 மணிக்கு, காவல் ஆய்வாளர் நீ. பாரதிபிரியா ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், திரு.K.இப்ராஹிம் சேட் அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை அளித்தார். மதுரை ஊ.த.க. பிரிவு, காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி தனி அறிக்கை மற்றும் அத்துடன் ஒப்படைத்த மதுரை மாவட்டம் கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 27.09.2024, திடீர் இணை ஆய்வின் போது கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,14,000/-, கைப்பற்றப்பட்ட 10 ஆவணங்கள் மற்றும் கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலில் இருந்த ஐந்து அலுவலர்கள் மற்றும் தனிநபர் சார்கேஷ் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் K. இப்ராஹிம் சேட், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், பழைய இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலகம், மதுரை. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க.எண். 14447 / 2023 / I1, நாள் : 28.09.2024 அய்யா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - பதிவுத்துறை - மதுரை தெற்கு பதிவு மாவட்டம் கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலக பொறுப்பு சார்பதிவாளர் திருமதி. புஷ்பலதா அவர்கள் பதிவு செய்வதற்காக வரும் பொது மக்களிடம் பத்திர எழுத்தர்கள் மூலமாக லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் நேற்று 27.09.2024-ம் தேதி திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - ரூ.1,14,000/- பணம் கைப்பற்றப்பட்டது - தனி அறிக்கை அனுப்புதல் - மேல் நடவடிக்கை எடுக்க கோருதல் குறித்து. நேற்று 27.09.2024-ம் தேதியன்று, மதுரை மாவட்டம், கள்ளிக்குடி கிராமம், கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றும் பொறுப்பு சார்பதிவாளர் திருமதி. புஷ்பலதா அவர்கள் பத்திரம் பதிவு செய்வதற்காக வரும் பொது மக்களிடம் பத்திர எழுத்தர்கள் மூலமாக லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவல் கிடைத்திருப்பதாக மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. பாரதிபிரியா அவர்கள் தெரிவித்தார்கள். பின்பு, நான் அழைத்ததின் பேரில், காவல் ஆய்வாளர்கள் திருமதி. பாரதிபிரியா, திரு.ரமேஷ்பிரபு மற்றும் அவர்களது போலீஸ் பார்ட்டியினருடன் இணைந்து நேற்று (27.09.2024) காலை 11.30 மணிக்கு புறப்பட்டு, சுமார் 12.45 மணிவாக்கில் கள்ளிக்குடி சார் பதிவாளர் அலுவலகம் அமைந்துள்ள கள்ளிக்குடி இரயில்வே பீடர் ரோடு பகுதியில் கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகம் வந்து, எதிரே உள்ள காலியிடத்திலும், கள்ளிக்குடி

சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கிழக்கு பக்கம் கள்ளிக்குடி இரயில்வே நிலையம் பகுதியிலும் நின்று இரகசிய கண்காணிப்பு மேற்கொண்டதில் மேற்குறிப்பிட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு செய்ய வந்தவர்கள் அரசு கட்டணம் நீங்கலாக சார்-பதிவாளர் பொறுப்பில் பணியாற்றும் திருமதி. புஷ்பலதா என்பவர் பத்திர எழுத்தர்கள் மூலமாக தங்களிடம் கூடுதல் தொகை வசூல் செய்து வைத்துள்ளதாக இரகசிய தகவல் தெரிவித்தனர். மேலும், சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலர்கள் 18.30 மணியை கடந்து பணி செய்து கொண்டிருந்தனர். அதனைத்தொடர்ந்து இன்று இரவு 18.45 மணியளவில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள மேற்படி மதுரை கள்ளிக்குடி சார்-பதிவாளர் அலுவலகம் நோக்கிச் சென்ற போது, வடக்கு திசை நோக்கி வாசல் கொண்ட கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலக வளாகத்தின் வாசலில் பிங்க் நிற சுடிதார் அணிந்து, செல்போனில் பேசிக்கொண்டிருந்த பெண்மணியிடம் என்னையும், உடன் வந்திருந்த மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. பாரதி பிரியா மற்றும் போலீஸ் பார்ட்டியினரையும் அறிமுகம் செய்து கொண்டு, அவரிடம் கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப் போவது சம்பந்தமாக விவரம் தெரிவித்து, மேலும், அவரிடம் எங்களது உடைமைகளை தவிர வேறு எதுவும் இல்லை என காண்பித்து, அவருடன் நாங்கள் அனைவரும் மேற்படி சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். அப்போது அப்பெண்மணி தான்தான் கள்ளிக்குடி பொறுப்பு சார்பதிவாளர் என்றும், தனது பெயர் புஷ்பலதா என்றும் கூறினார். அவ்வலுவலகத்தின் உள்ளே செல்வதற்கு முன்பிருந்தே எங்கள் வசம் இருந்த கைப்பேசி மூலமாக நடக்க இருக்கும் நிகழ்வுகள் அனைத்தையும் சட்டப்படி ஒளிப்பதிவு செய்ய ஆரம்பிக்கப்பட்டது. கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகமானது மதுரை மாவட்டம், கள்ளிக்குடி தாலுகா, திருமங்கலம் - விருதுநகர் மெயின் ரோட்டில் கிழக்கு பக்கத்தில் செல்லும் இரயில்வே பீடர் ரோட்டில் வடக்கு திசையை நோக்கியவாறு உள்ள பழைய கருங்கல் கட்டிடமாக இருந்தது. அந்த அலுவலகத்தின் நுழைவுவாயிலின் கதவு நிலையில் வடக்கு பார்த்தவாறு சி.சி.டி.வி கேமரா ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் நுழைந்தவுடன் எதிரில் தெற்கு பக்க சுவரையொட்டி வடக்கு திசை நோக்கி சார்பதிவாளர் இருக்கை இருந்தது. சார்பதிவாளர் அறையின் வடக்கு பக்க சுவற்றிலும், தெற்கு பக்க சுவற்றிலும் சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்தது. சார்பதிவாளர் இருக்கைக்கு மேற்படி திருமதி. புஷ்பலதா சென்றவுடன் அவரது இருக்கை, மர மேஜை மற்றும் அவரது உடைமைகளை சோதனை செய்த போது, அவரது கைப்பையில் பணம் ரூ.320/- இருந்தது. அது குறித்து அவரிடம் விபரம் கேட்ட போது, தனது போக்குவரத்து செலவிற்காக வைத்திருப்பதாகவும், ஆனால் அதைப்பற்றிய விபரத்தை தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும், சார்பதிவாளர் இருக்கைக்கு கிழக்கு பக்கம் அவரது இருக்கைக்கு அருகில் Data Entry

Operator அமர்ந்து பணி செய்யும் இருக்கையில் வடக்கு திசை நோக்கி அமர்ந்திருந்தவரிடம் விசாரிக்க அவரது பெயர் லாவண்யா என்றும், தான் Data Entry Operator பணி செய்வதாகவும் தெரிவித்தார். பின்னர், அவரது இருக்கை, அவரது மேஜை மற்றும் அவரது உடைமைகளை சோதனை செய்த போது, அவரது மணிபர்சில் பணம் ரூ.160/- இருந்தது. அது குறித்து அவரிடம் விபரம் கேட்ட போது, தனது கைச்செலவிற்காக வைத்திருப்பதாகவும், தான் காலையில் அலுவலகத்திற்கு வரும் போது கொண்டு வந்திருந்த ரூ.370/-யை தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளதாகவும், தனது சாப்பாடு மற்றும் டீ செலவு போக தற்போது ரூ.160/- வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தின் கிழக்கு பக்கத்தில் கண்ணாடி அடைக்கப்பட்டு குளிரூட்டப்பட்ட அறையில் 4 கணிணிகள் மேஜைகளில் வைக்கப்பட்டிருந்தது. மேலும், ஜெராக்ஸ் மிஷின் ஒன்றும் வைக்கப்பட்டு இருந்தது. அந்த கணிணி அறையில் மேற்கு பக்கத்தில் கிழக்கு திசை நோக்கி வைக்கப்பட்டு இருந்த இரண்டு கணிணிகளின் முன்பாக இரண்டு அலுவலர்கள் இருக்கையில் அமர்ந்திருவர்களை விசாரிக்க ஆண் அலுவலர் அவரது பெயர் ரமேஷ் என்றும் அவர் இளநிலை உதவியாளராக பணிசெய்து வருவதாகவும் தெரிவித்தார். அவரது இருக்கை, மேஜை மற்றும் அவரது உடைமைகளை சோதனை செய்த போது, அவரது பேண்ட் பாக்கெட்டில் பணம் ரூ.320/- இருந்தது. அது குறித்து அவரிடம் விபரம் கேட்ட போது, தனது கைச்செலவிற்காக வைத்திருப்பதாகவும், தான் காலையில் அலுவலகத்திற்கு வரும் போது கொண்டு வந்திருந்த ரூ.340/-யை தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளதாகவும், தனது டீ செலவு போக தற்போது ரூ.320/- வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், அவரது இருக்கைக்கு வடக்கு பக்கம் இருந்த கணிணி முன்பாக இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த பெண் அலுவலரிடம் விசாரித்த போது, அவர் தனது பெயர் ராஜேஸ்வரி என்றும், தான் சோழவந்தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்துவிட்டு பணியிடமாறுதலாகி இன்றுதான் கள்ளிக்குடி அலுவலகத்திற்கு வந்து உதவியாளராக பணிக்கு அறிக்கை செய்ததாகவும் கூறினார். மேலும், அவரது இருக்கை, மேஜை மற்றும் உடைமைகளை சோதனை செய்த போது, அவரது கைப்பையில் பணம் ரூ.260/- இருந்தது. அது குறித்து அவரிடம் விபரம் கேட்ட போது, தனது கைச்செலவிற்காக வைத்திருப்பதாகவும், தான் காலையில் அலுவலகத்திற்கு வரும் போது கொண்டு வந்திருந்த ரூ.300/-யை தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள தாகவும், தனது டீ செலவு போக தற்போது ரூ.260/- வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், மேற்படி அறையில் ராஜேஸ்வரிக்கு அருகே வடக்கு பக்கம் நின்றிருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவரது பெயர் வீரமணி என்றும், தான் IP Camera Operator ஆக பணிபுரிவதாகவும் தெரிவித்தார். அவரது உடைமைகளை சோதனை செய்ய, அவரது சட்டைப்பையில் ரூ.100/- இருந்தது. அது குறித்து அவரிடம் விபரம் கேட்ட போது, தனது கைச்செலவிற்காக

வைத்திருப்பதாகவும், தான் காலையில் அலுவலகத்திற்கு வரும் போது கொண்டு வந்திருந்த ரூ.200/-யை தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள தாகவும், தனது சாப்பாடு செலவு போக தற்போது ரூ.100/- வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து, மேற்படி கணிணி அறையில் தெற்கு பக்க சுவரையொட்டி வடக்கு பார்த்தவாறு வைக்கப்பட்டிருந்த இரும்பு பீரோவை சோதனை செய்வது குறித்து, பொறுப்பு சார்பதிவாளர் திருமதி. புஷ்பலதா அவர்களிடம் தெரிவித்த போது, அவர் மேற்படி பீரோவில் Pending Document, Audit Report, Marriage Registers, Fixation Documents ஆகியவைகள் வைத்து பராமரிக்கப்பட்டு வருவதாகவும், மேற்படி திரு. ரமேஷ் மற்றும் திரு. வீரமணி ஆகியோரை மேற்படி பீரோவில் உள்ள ஆவணங்களை எடுத்து காண்பிக்க உதவும்படி கூறினார். அதன்பேரில், மேற்படி பச்சை இரும்பு பீரோ சாவியுடன் திறந்து வைக்கப்பட்டிருந்ததை பார்த்த போது, அது மொத்தம் நான்கு அறைகளாக பிரிக்கப்பட்டு இருந்தது. மேலிருந்து இரண்டாவது அறை மரக்கதவுகள் போட்டு மூடப்பட்டிருந்தது. மேற்படி பீரோவின் அறைகளை மேலிருந்து சோதனை செய்து வந்த போது, பீரோவின் கீழ் தட்டில் கிழக்கு மூலையில் பச்சை நிற பாலீத்தின் கவர் கத்தையாக முடிச்சு போடப்பட்டு இருந்ததை திரு.வீரமணி எடுத்து அதனை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு. இப்ராஹிம் சேட் அவர்களிடம் ஒப்படைத்தார். அதனுள்ளே பணம் கத்தையாக இருந்தது. அப்பணத்தை பற்றி கேட்க தங்களுக்கு தெரியாது என்று திருமதி.புஷ்பலதா மற்றும் அவ்வலுவலக அலுவலர்கள் தெரிவித்தார்கள். தொடர்ந்து, மேற்படி கணிணி அறை முழுமையாக சோதனையிடப்பட்டது. தொடர்ந்து, மேற்படி கணிணி அறைக்கு வடக்கு பக்கம் இருந்த பகுதிக்கு சென்று பார்வையிட, அங்கு வடக்கு பக்கம் சுவரையொட்டி ஜன்னலுக்கு முன்பு தெற்கு பார்த்தவாறு இரும்பு பீரோ வைக்கப்பட்டிருந்தது. அந்த இரும்பு பீரோவின் மேலே சி.சி.டி.வி-யின் டி.வி.ஆர் வைக்கப்பட்டிருந்தது. இந்த இரும்பு பீரோவிற்கு கிழக்கு பக்கம் உள்ள மேஜையில் அலுவலக செயல்பாடுகள் பார்க்கும்படி அமைந்துள்ள சி.சி.டி.வி. மானிட்டர் வைக்கப்பட்டிருந்தது. அதில் அலுவலகத்தின் சி.சி.டி.வி. பதிவுகள் ஓடிக்கொண்டு இருந்தது. மேலும், அந்த அறையில் இருந்த நபரை விசாரித்த போது, தனது பெயர் சார்கேஷ் என்றும், தான் மேற்படி அலுவலகத்தில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு சார்பதிவாளராக அருள்முருகன் அவர்கள் பணிபுரிந்த போது, அலுவலகத்தில் சுத்தம் செய்யும் பணிகளுக்காக வேலைக்கு சேர்க்கப்பட்டு அது முதல் மேற்படி அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், தினமும் தனக்கு ரூ.100/-யை சம்பளமாக மேற்படி அருள்முருகன் மற்றும் அதனை தொடர்ந்து புஷ்பலதா அவர்களும் கொடுத்து வந்ததாக மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு. இப்ராஹிம் சேட் அவர்களிடம் தெரிவித்தார். அதனை உடனிருந்த திருமதி.புஷ்பலதா அவர்களும் உறுதி செய்து தனது சொந்த பணத்திலிருந்து ரூ.100-ஐ மேற்படி சார்கேஷ் அவர்களுக்கு தினமும் கூலியாக கொடுப்பதாக தெரிவித்தார். அதன்பின்னர் அவரது உடமைகள சோதனை செய்த போது,

அவரது சட்டைப்பையில் ரூ.70/- இருந்தது. அவர் அதனை தனது சொந்த செலவிற்கு வைத்திருப்பதாக தெரிவித்தார். பின்பு மேற்படி அறையில் திறந்து காணப்பட்ட இரும்பு பீரோவை பார்வையிட்ட போது, அதில் மொத்தம் 4 அறைகள் இருந்தது. அதனை முழுமையாக சோதனையிட பழைய ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அந்த அறை முழுமையாக சோதனையிடப்பட்டது. பின்னர், மேற்படி அலுவலக சார்பதிவாளர் இருக்கைக்கு மேற்குபக்கம் உள்ள பதிவு வைப்பறையை சோதனையிடுவது குறித்து பொறுப்பு சார்பதிவாளர் புஷ்பலதா அவர்களிடம் தெரிவித்த போது, அவர் அந்த பதிவு வைப்பறையில் மின்சார வசதி இல்லை என்றும், மேற்படி சார்கேஷ் என்பவரை அழைத்து சோதனைக்கு உதவும்படி கூறினார். அதன்பேரில், மேற்படி சார்கேஷ் என்பவருடன், மேற்படி பதிவு வைப்பறைக்கு உள்ளே சென்று செல்போன் டார்ச் உதவியுடன் சோதயிட்ட போது, பதிவு வைப்பறையின் கதவு நிலையில் மேற்கு பார்த்தவாறும், வடக்கு பக்க சுவற்றில் தென்கிழக்கு பார்த்தவாறு சி.சி.டி.வி கேமராக்கள் இருந்தது. அவ்வறையில் சுமார் 12 அடி உயரமுள்ள இரும்பு வலையுடன் கூடிய இரும்பு பீரோக்களும், சாதாரண இரும்பு பீரோக்களும், சுமார் 10 அடி உயரமுள்ள மர பீரோக்களும், ஸ்டீல் ரேக்குகளும், மர பெஞ்சுகளும் உள்ளது. மேற்படி பீரோக்களுக்கு நம்பர் வழங்கப்பட்டு இருந்தது. அவை அனைத்திலும் அவ்வலுவலக சம்பந்தப்பட்ட ஆவணங்கள் வைக்கப்பட்டிருந்தது. அவைகள் எல்லாம் சோதனையிடப்பட்டது. பின்பு, மேற்படி அறையில் மேற்கு பக்கம் வைக்கப்பட்டுள்ள சுமார் 12 அடி உயரமுள்ள இரும்பு வலையுடன் கூடிய இரும்பு பீரோக்களில் எண் 14 -க்கு எதிரே மேற்கு பக்க சுவரை ஒட்டி இருந்த மர பெஞ்சில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சோதனையிட்ட போது, அங்கு ஆவணங்களுக்கு மேலே காணப்பட்ட ஸ்கை புளு நிற அட்டை போட்ட 1093 BOOK I என சிவப்பு நிறத்தில் மேல்பகுதியில் எழுதப்பட்டிருந்த BOOK I MISCELLANEOUS REGISITER From Document No.233 of 2006 Copy Filed on 14.03.2006 ஆவணபுத்தகத்தின் பக்கங்கள் 4 மற்றும் 5 க்கு இடையில் கத்தையாக பணம் வைக்கப்பட்டிருந்ததை மேற்படி திரு. சார்கேஷ் எடுத்து அதனை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு. இப்ராஹிம் சேட் அவர்களிடம் ஒப்படைத்தார். அப்பணத்தை பற்றி உடனிருந்த சார்பதிவாளர் மற்றும் அவ்வலுவலக அலுவலர்களை விசாரிக்க, தங்களுக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தனர். அதனை தொடர்ந்து, மேற்படி பதிவு வைப்பறை முழுமையாக சோதனையிடப்பட்டது. பின்னர், மேற்படி சார்பதிவாளர் திருமதி. புஷ்பலதா அவர்களின் இருக்கை முன்புள்ள மேஜையில் வைத்து, மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு. இப்ராஹிம் சேட் அவர்கள் மேற்படி அலுவலகத்தில் இருந்து எடுக்கப்பட்ட பணத்தை எண்ணிப்பார்த்த போது, கணிணி அறையில் உள்ள பீரோவின் கீழ்தட்டில் இருந்து எடுக்கப்பட்ட பச்சை நிற பாலீத்தின் கவரில் மொத்தம் ரூ.60,000/- (ரூ.500 X 100 = ரூ.50,000/- மற்றும் ரூ.100 X 100 = ரூ.10,000/-) இருந்தது. பின்னர், மேற்படி பதிவு

வைப்பறையிலிருந்து எடுக்கப்பட்ட பணக்கத்தையில் மொத்தம் ரூ.54,000/- (ரூ.500 X 104 = ரூ.52,000/-, ரூ.200 X 1 = ரூ.200/- மற்றும் ரூ.100 X 18 = ரூ.1,800/-) இருந்தது. மேற்படி பணம் மொத்தம் ரூ.1,14,000/- குறித்து, அவ்வலுவலக சார்பதிவாளர் திருமதி. புஷ்பலதா, உதவியாளர் திருமதி. ராஜேஸ்வரி, இளநிலை உதவியாளர் திரு. ரமேஷ், IP Camera Operator திரு. வீரமணி, Data Entry Operator திருமதி. லாவண்யா, தனிநபர் திரு. சார்கேஷ் ஆகியோரிடம் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் அவர்கள் விபரம் கேட்ட போது, அவர்கள் அனைவரும் தங்களுக்கு அப்பணம் குறித்து எதுவும் தெரியாது என தெரிவித்தார்கள். எனவே, மேற்படி பணம் ரூ.1,14,000/-த்தை கைப்பற்றினேன். மேலும், அவர் அலுவலக தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் இன்றைய தேதியில் அலுவலர்களால் குறிப்பிடப்பட்டுள்ள கையிருப்பு பணம் குறித்த விபரங்களை பார்வையிட்டபோது, மேற்சொன்னவாறு அவை சரியாக இருந்த காரணத்தினால் அலுவலர்களிடமிருந்து பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. பின்னர், மேற்படி அலுவலகத்தில் இருந்த அரசு பணியாளர் வருகை பதிவேட்டை பார்வையிட்ட போது, அதில் திருமதி. புஷ்பலதா அவர்கள் தனது அலுவலக வருகை குறித்து 27.09.2024 மற்றும் 28.09.2024 ஆகிய தேதிகளில் கையெழுத்து இட்டிருந்தார். அது குறித்து அவரிடம் கேட்ட போது, இன்று காலையில் கையெழுத்திடும் போது, தான் தவறுதலாக நாளைய தேதியிலும் கையெழுத்திட்டதாக கூறினார். மேலும், வருகை பதிவேட்டில் திருமதி. ராஜேஸ்வரி மற்றும் திரு. ரமேஷ் ஆகியோரும் கையொப்பமிட்டு இருந்தார்கள். மேலும், மற்றொரு வருகை பதிவேட்டில், மா. லாவண்யா மற்றும் மு. வீரமணி ஆகியோரும் 27.09.2024-ம் தேதியில் கையொப்பமிட்டிருந்தார்கள். மேலும், மேற்படி அலுவலகத்தில் பணியில் இருந்த அலுவலர்களிடமும், தனிநபர் சார்கேஷ் என்பவரிடமும் நான் தனித்தனியாக விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை பெற்றேன். மேலும், அவர் திருமதி. புஷ்பலதா அவர்களிடம் சார்பதிவகத்தில் 27.09.2024-ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்து விசாரித்த போது, திருமதி. புஷ்பலதா அவர்கள் மொத்தம் 28 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் 2 திருமண பதிவுகள் செய்துள்ளதாகவும், மேற்படி ஆவணங்களின் பதிவிற்காக பிரிவு 41 பதிவு சட்டம் கட்டணங்கள் அனைத்தும் ஆன்லைன் மூலமாக செலுத்தப்பட்டுள்ளது. அதே போல் திருமண பதிவிற்கும் ஆன் லைன் மூலமாக பணம் செலுத்தப்பட்டுள்ளது என்றும், தங்களது அலுவலத்தில் இன்றைய தினம் ரொக்கமாக நேரில் யாரும் பணம் ஏதும் செலுத்தவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் அவர் தங்களது அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் பத்திர பதிவு மற்றும் இதர பதிவுகளுக்கான பணத்தை ஆன்லைனில்தான் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து, மேல் விசாரணைக்காக திருமதி. புஷ்பலதா அவர்கள் ஆஜர் செய்த ஆவணங்களான கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலக (1) வருகைப் பதிவேடு (2) TCS staff வருகைப் பதிவேடு, (3) தாமத

வருகைப்பதிவேடு, (4) தணிக்கை வருகைப்பதிவேடு, (5) இயக்கப்பதிவேடு, (6) குறுந்தகடு பெறுபவர் கையெட, (7) தனிநபர் பண இருப்பு பதிவேடு, (8) கள்ளிக்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் 27.09.2024-ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் விபரங்கள், (9) மதுரை (தெற்கு) மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறைகள் - ந.க. எண்.529/அ1/ 2024 நாள் : 19.01.2024 மற்றும் (10) 1093 BOOK I - MISCELLANEOUS REGISITER From Document No.233 of 2006 Copy Filed on 14.03.2006 ஆவணபுத்தகத்தின் பக்கம் 4 மற்றும் 5-ன் நகல் ஆகிய 10 ஆவணங்களும், கணக்கில் வராத பணம் ரூ.1,14,000/-மும் கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், பொறுப்பு சார்பதிவாளர் திருமதி. புஷ்பலதா, உதவியாளர் திருமதி. ராஜேஸ்வரி, இளநிலை உதவியாளர் திரு. ரமேஷ், IP Camera Operator திரு. வீரமணி, Data Entry Operator திருமதி. லாவண்யா, தனிநபர் திரு. சார்கேஷ் ஆகியோரின் எழுத்து மூலமான வாக்குமூலங்கள் மற்றும் கள்ளிக்குடி சார்பதிவகத்தில் திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட தொகை மொத்தம் ரூ.1,14,000/- ஆகியவற்றை இணைத்து திருமதி. புஷ்பலதா, உதவியாளர், பேரையூர் சார்பதிவகம், அயல்பணி (பொறுப்பு) சார்பதிவாளர், கள்ளிக்குடி சார்பதிவகம், மதுரை என்பவர் மீது மேல் நடவடிக்கை எடுக்க ஆவண செய்யுமாறு தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம் /- XXXXX 28.09.2024 (K. இப்ராஹிம் சேட்) மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், பழைய இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலகம், மதுரை. இணைப்பு : 1) திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 28.09.2024 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,14,000/- 3) கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட 10 ஆவணங்கள் 4) ஐந்து அலுவலர்கள் மற்றும் தனிநபர் சார்கேஷ் ஆகியோரது வாக்குமூலங்கள்.

Sir, Received this report today (28 –9– 24) at 15.00 hrs along with Joint Surprise Check Proceedings, dated 27-9-24, Cash Rs. 1,14,000/-, Six statements and Seized 10 documents. After obtaining permission from the Superior Officers, I Registered a case in Madurai V&AC Crime No.11/2024 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 106 BNSS on 28.09.2024 at 15.45 hrs. Sd/- XXXXX 28.9.24 [N. Bharathi Priya] Inspector, V&AC, Madurai.

The original FIR along with report of Tr. K. Ibrahim Seit, Joint Surprise Check Proceedings Dated : 27.09.2024 and 6 statements are submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trial of Cases under PC Act, Madurai and other copies were sent to the officers concerned.

28-9-24

Inspector, VLAC.
Madurai.